வெளியீடு எண் 139.

திருக்குரக்குக்கா திருப்பதிகம்.

அப்பர்

தருமபுர ஆதீனம்.



திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
௨௫-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வெளியீடு எண் 139.

உ

குருபாதம்

திருச்சிற்றம்பலம்

திருக்குரக்குக்கா திருப்பதிகம்

இது

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன

உடு-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

திருவுள்ளத்தின்படி

வெளியிடப்பெற்றது.

தருமபுர ஆதீனம்

1947.

முதற் பதிப்பு,
பிரதிகள் 300.

ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமபுரம்.

22-7-47. Q. H. No. T. E. 68.

ஶ்ரீ

குருபாதம

தலச்சிறப்பு

சோழநாட்டுக் காவிரியின் வடகரைத் தலங்கள் அறுபத்துமூன்றனுள் திருக்குரக்குக்கா என்னும் இத்தலம் இருபத்தெட்டாவது தலமாக விளங்குகிறது. இராவணனைக் கொன்றதால் இராமபிரானைப் பிரமபாதகம் பற்றித் தொடர்ந்து துன்புறுத்தியது. வாட்டமுற்றார் இராமர். இதற்கு என்னசெய்யலாமென ஆலோசித்தார். சிவபூசை செய்தால் இது நீங்கும் எனத் துணிவுகொண்டார். அருகில்நின்ற அநுமானைநோக்கி, "பூசிக்க இலிங்கம் வேண்டுமென்றனர்" ஆணைப்படி அநுமன் சென்றான். இலிங்கம் கொணர்ந்தான். ஆயினும் கொணரக்காலம் தாழ்த்தமையால் மணலில் இலிங்க உரு அமைத்து உரிய காலத்தில் பூசையை முடித்தார். இலிங்கம் கொணர்ந்த அநுமன் "என்னே?

அவசரம். பூசையை முடித்தனையே'' என்று கோபித்து பூசிக்கப்பெற்ற இலிங்கத்தைத் தன் வாலினுல் கட்டி இழுத்தனன். அன்பினுலன்றி ஆணவமுனைப்பால் — உடல் வலியால் இறைவனை இழுக்க ஒண்ணுமோ? நாணம் கொண்டான். மூச்சொடுங்கியது; சோர்ந்து வீழ்ந்தான்; இச் சிவத்துரோகம் நீங்கத் தவமியற்றினுன். தவத்திற்கிரங்கிய பெருமான் வெளிப்பட்டு "அநும! கன்மநாசபுரமாகிய கருப்பறியலூர் சார்ந்து எம்மைப்பூசிக்க'' என்றனர். அவ்வாறே அநுமன் இங்குவந்து இலிங்கமமைத்து வழிபட்டுச் சிவத்துரோகம் போக்கிக்கொண்டார். இவ்வாறு அநுமன் (குரங்கு) பூசித்ததால் இத்தலம் இப்பெயர் பெற்றதெனத் தலபுராணம் கூறுகிறது.

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த திருப்பதிகம் ஒன்றுமட்டும் இத்தலத்திற்குக் காணப்படுகின்றது. இறைவன் **குந்தளநாதர்; இறைவி குந்தளநாயகி.**

திருப்பதிகப் பொருள் விளக்கம்

க. [குற்றம் செய்தனம், இதைப் போக்குவது எவ்விதம் என்று புலம்பி வருந்தும் மக்காள்] நீங்கள் மரத்தில் தங்கியிருக்குங் கொக்குகள் கத்துவனபோல், குற்றச் சுமையைத் தாங்கி எப்பதியடைந்தால் அச்சுமை கழியும் என்று வருந்திப் புலம்பித் திரிதல் விட்டு, கால்கள் பலவாகப் பெருகிச் செல்லுங் காவிரிநீர் அலைமோதுகின்ற கரையிற் பொருந்திய திருக்குரக்குக்கா என்னும் திருப்பதியைத்தளராமல் சென்று சேர்வீர்களானால் உங்கள் பாவம் யாவும் கெட்டழியும். நீர், அலறி, காவி, திரிந்து அயராது அடையக் குற்றம் கெடும் என்று கூட்டுக.

சரக்கு-பண்டம், சினை முதலிய குற்றங்கள் "சினமெனுஞ் சரக்கையேற்றி" என்பதுங் காண்க. காவி-தாங்கி, காவுதல்-தாங்கல், சுமத்தல். குரக்குக்கா-குரங்கு+கா, "மென்றொடர் மொழியுட் சிலவேற்றுமையில்

தம்பினவன் றொடராகாமன்னே" என்ற நன்னூல் விதிப்படி குரக்குக்கா வல்லின மாகத் திரிந்தது. குரங்கினால் வழிபடப் பட்ட கா என்றும், குரங்குகள் தங்குகின்ற கா (சோலை) என்றும் பொருள்படும்.

உ. இருபக்கமும் கரை கட்டப்பட்டு அமைந்த வழியே ஒழுகுகின்ற காவிரி நீர் பாய்ந்த வயல்களில் மண்வெட்டிகொண்டு வெட்டப்பட்ட இடங்கள் எங்கும் தண்ணீர் சுரக்கின்ற குரக்குக்காவை நெருங்கி முறைப் படி அங்கு எழுந்தருளியிருக்கும் இறைவன் திருவடிகளைத் துதிக்க முயற்சிப்பவர்களை அடுத்து நீங்காது வருத்தும் துன்பங்கள் யாவும் விரைந்து பறந்தொழியும்.

ஆறு-வழி. கொட்டு - மண்வெட்டுங் கருவி. முயல்பவர்க்கு இட்டு ஆரு என்று பிரித்து இடப்பட்டு ஆருதிருக்கும் இடர்; அஃதாவது வஞ்சம், பில்லி முதலியன என்க.

ந. தன் இரண்டு கரையாகிய பக்கவிட மெங்கும் பரவி ஓடுகின்றதும், வயலிடமெல் லாம் பாய்ந்து ஓடுவதுமாகிய செம்மையான காவிரி நீரானது தன்னுடன் கொய்யப்பட்ட பொருள்களையெல்லாம் கொண்டு சேர்க்குங் குரக்குக்காவில் எழுந்தருளியிருக்கும் அழ கனை வழிபடுவார்கட்குத் துன்பம் இல்லை யாம்.

கை-பக்கக்கரை, செய்-வயல், கொய்- முதனிலைத் தொழிற்பெயர், ஐயன்-தலைவன், பெருமான்.

ச. எல்லாத் திசைகளிலும் பெய்த மழை நீர் அருவிகளாகத் திரண்டு பெருகிக் காவிரி யாகப் பாய்கின்ற நீர்க்கரையில் கொக்குக் கூட்டங்கள் பொருந்திய சோலையாகிய குரக் குக்காவில் எழுந்தருளியிருக்கும் நிருவாணி யாகிய சிவபெருமானைப் புகழ்பவர்களின் வினைகள் அழிந்துபோம்.

புக்கு-புகுந்து, போந்த-புகுந்த, வந்த, கொக்கினம் என்பதற்கு மாமர முதலிய மரங்கள் எனலுமாம். நக்கன்-சிவன், திரிபுரத்தைச் சிரித்து எரித்தவன். நவில்-சொல்.

ரு. வெள்ளம் பரவிப் பெருகி யெழுகின்ற காவிரிநீர் பாய்ச்சப்பட்ட வயல் எங்கும் மண்வெட்டிகொண்டு திருத்தப்படும் அழகிய உழவுத்தொழில் சிறக்கும் குரக்குக் காவில் அன்புடன் தங்கியிருப்பவர்களுக்குத் துன்பம் இல்லை.

பரந்திட - பரத்தலால். 'கொட்டு அம்மா முழவு ஓங்கு' எனக் கொண்டு கொட்டப்படுகின்ற அழகிய பெரிய முழவு (மத்தளம்) சிறக்கின்ற என்றும் ஆம். இட்டம் - பிரியம், அன்பு.

சா. விண்ணிடம் விளங்கும் தேவர்களாலும், பரந்த கடல் வண்ணமுடைய

திருமாலாலும், நான்கு முகங்களையுடைய பிரமனாலும் அளந்தறியமுடியாத, அழகிய மாளிகைகள் அமைந்த குரக்குக்காவிலுள்ள திருக்கோயிற் பக்கத்தவராய்த் திரிகின்றவர் கட்குப் பாவம் இல்லை.

மேலை - மேல், விண். கடல்மால் - திருப் பாற்கடலில் அறிதுயில் புரியும் அரி; எனலு மாம். ஒணா - ஒண்ணா, இது, ஒண்ணாத என்ற எதிர்மறைப் பெயரெச்சத்தின் ஈறு தொக்கது கோலம் - அழகு, வடிவு. பால் - பக்கம்.

எ. கல்லால மரத்தடியில் எழுந்தருளிய அழகரும், மார்க்கண்டன்பொருட்டு அவன் உயிரைக்கவரவந்தகாலனை உதைத்து அழித்த தலைவரும். ஆகிய சிவபெருமான்; அழகிய மயில்கள் ஆடி ஆரவாரிக்கும் குரக்குக்காவின் பக்கத்தவராயினவர்கட்கு இரங்கி அருள் செய்வார்.

ஆல் - கல்லாலமரம். அழகன் - தட்சிணாமூர்த்தி, தென்முகக்கடவுள். ஆறுதல்-ஆடுதல், ஒலித்தல்.

அ. செவ்வானம்போற் சிவந்த சுடரொளியினரும், அரையில் எலும்பணிந்திருப்பவரும், எம்மிகப் பழமையானவரும், கொக்குக்கூட்டங்கள் சேர்ந்திருக்கும்வயலையுடைய குரக்குக்காவில் எழுந்தருளியிருக்கின்றவருமான சிவபெருமானை வணங்க நம் வினை கெட்டுவிடும்.

செக்கர் - சிவப்பு. அக்கு - எலும்பு. உருத்திராக்கம். ஆதிபுராணனார் - முன்னைப் பழம்பொருள் 'முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்பழம்பொருளே' என்பர் மாணிக்க வாசகர். கொக்கினம் - கொக்குக்கூட்டம், கொக்கு - மாமரம். இனம் - மற்றுமுள்ள கனிமரங்கள்.

9. குற்றங்கெட விரும்பும் அன்பர்களே! திருநீலகண்டன் திருவடிகளை மனதில் நினைந்து உருகியும், மெய் நெகிழ்ந்து வணங்கியும் துதித்து எழுங்கள். நம் செழித்த குரக்குக்காவில் எழுந்தருளியிருக்கும் ஆசிரியனை (பெரியவனை) இரவும் பகலும் (இடையறாது) போற்றி வழிபாடு செய்யுங்கள்.

ஊன்-மாமிசம், மாமிசத்தாலான உடல் எழுமின் - ஏவற் பன்மை. கரிய கண்டம் - திருப்பாற் கடலிற்றோன்றிய நஞ்சையுண்டதாற் கறுத்த கழுத்து. எல்லி - பகல். எல்- சூரியன்.

10. தான் தங்கியிருக்கும் கைலைமலையைத் தன் இருபது கைகளாலும் எடுக்கலான இராவணனை இரக்கமில்லாமல் பத்துத் தலையின் பலமும் தளரும்படி அழுந்த மிதித்தவன் தங்கும் இடமாகிய, குரங்குக் கூட்டங்கள் மகிழ்ந்து பாயும் குரக்குக்காவில்

எழுந்தருளியிருக்கும்வரங்கள் தந்தருள்வானை வணங்கப்பெற்றவர்கள் வானுலகை ஆளுந் தரத்தராவர்.

மலை - கைலைமலை. முடி - தலை. உரம்- பலம். ஒல்க - தளர. வரத்தன் - வரங் கொடுப்பவன், மேலானவன்.

சிவமயம்

திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பதிகம்

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்

மரக்கொக் காமென வாய்விட் டலறிநீர்
சரக்குக் காவித் திரிந்தய ராதுகால்
பரக்குங் காவிரி நீரலைக் குங்கரைக்
குரக்குக் காவடை யக்கெடுங் குற்றமே. ௧

கட்டா றேகழி காவிரி பாய்வயல்
கொட்டா றேபுன லூறு குரக்குக்கா
முட்டா ருவடி யேத்த முயல்பவர்க்
கிட்டா ருவிட ரோட வெடுக்குமே. ௨

கைய னைத்துங் கலந்தெழு காவிரி
செய்ய னைத்திலுஞ் சென்றிடுஞ் செம்புனல்
கொய்ய னைத்துங் கொணருங் குரக்குக்கா
ஐய னைத்தொழு வார்க்கல்ல லில்லையே. ௩

மிக்க னைத்துத் திசையு மருவிகள்
புக்குக் காவிரி போந்த புனற்கரைக்
கொக்கி னம்பயில் சோலைக் குரக்குக்கா
நக்க னைநவில் வார்வினை நாசமே. ௪

விட்டு வெள்ளம் விரிந்தெழு காவிரி
இட்ட நீர்வய லெங்கும் பரந்திடக்
கொட்ட மாமுழ வோங்கு குரக்குக்கா
இட்ட மாயிருப் பார்க்கிட ரில்லையே. ௫

மேலை வானவ ரோடு விரிகடல்
மாலு நான்முக னாலு மளப்பொணாக்
கோல மாளிகைக் கோயிற் குரக்குக்காப்
பால ராய்த்திரி வார்க்கில்லை பாவமே. ௯

ஆல நீழ லமர்ந்த வழகனார்
காலனையுதை கொண்ட கருத்தனார்
கோல மஞ்ஞைக ளாலுங் குரக்குக்காப்
பால ருக்கருள் செய்வர் பரிவொடே. ௰

செக்க ரங்கெழு செஞ்சுடர்ச் சோதியார்
அக்க ரையரெம் மாதி புராணனார்
கொக்கி னம்வயல் சேருங் குரக்குக்கா
நக்க னைத்தொழ நம்வினை நாசமே. ௧௧

உருகி யூன்குழைந் தேத்தி யெழுமினீர்
கரிய கண்டன் கழலடி தன்னையே
குரவ னஞ்செழுங் கோயிற் குரக்குக்கா
இரவு மெல்லியு மேத்தித் தொழுமினே. ௯

இரக்க மின்றி மலையெடுத் தான்முடி
உரத்தை யொல்க வடர்த்தா னுறைவிடம்
குரக்கி னங்குதி கொள்ளும் குரக்குக்கா
வரத்தனைப்பெற வானுல காள்வரே. ௰

திருச்சிற்றம்பலம்.

உ

திருநாவுக்கரசர் தோத்திரம்

ஆலநிழ லமர்ந்தபிரான் அருளி னாலே
அன்றொருகற் புணையாக ஆழி நீந்தி
ஞாலமுழு துய்ந்தருளே நவை யிலாத
நறுந்தமிழின் பலமினிது நாளு நல்கிச்
சாலமிகு பாவமுது வேனில் வெம்மைத்
தழலாற ஆகமநூற் றருமஞ் சான்ற
சீலநிறை சைவநெறி நிழல் பரப்பும்
திருநாவுக் கரசினடி சிந்தை செய்வாம்.